# 16

# “கொஞ்சக்காலத்திலே”

## (யோவான் 16)

*“நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றார். அப்பொழுது அவருடைய சீஷரில் சிலர்: நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள் மறுபடியும் கொஞ்சக் காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்றும் அவர் நம்முடனே சொல்லுகிறதின் கருத்தென்ன என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டதுமன்றி: கொஞ்சக்காலம் என்கிறாரே, இதென்ன? அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்கவில்லையே என்றார்கள் ...” (வசனங்கள் 16-24).*

இயேசு, தமது அப்போஸ்தலர்கள் எதிர்கொள்ள இருந்தவற்றிற்கு அவர்களை ஆயத்தப்படுத்துவதைத் தேர்ந்து கொண்டார், அதன் ஒரு தொகுப்பே யோவான் சுவிசேஷத்தில் நமக்காகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (13 முதல் 16 வரையில் உள்ள அதிகாரங்களைக் காணவும்.) இயேசு சிலுவையில் அறையப்படுதல் என்ற துன்ப நிகழ்வு, அவர்கள் மீது தனது சிறகுகளைப் பரப்பிய வேளையில், இயேசு அவர்களை ஆறுதல்படுத்தி, கணிசமான நினைவுகூருதல்கள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் தெய்வீக ஆறுதல்கள் ஆகியவற்றைக் கொண்டு அவர்களின் ஆவிகளுக்கு மறு வலிவு ஊட்டினார் (16:16-24). குறிப்பாக இயேசு, அவர்களை ஒரு இரட்டை எதிர்காலத்திற்கென்று திடப்படுத்தினார் - அது விரைவிலேயே நிகழ இருந்தது மற்றும் அது தொலைதூரத் தொடுவானத்தில் அசைவாடியது.

“கொஞ்சக்காலத்திலே” என்ற சொற்றொடரில் அவரது திறவுகோல் சிந்தனை உருப்பெற்றிருந்தது, இந்தச் சொற்றொடர், அவரால் மற்றும்/அல்லது அவரது அப்போஸ்தலர்களால் இந்த ஒன்பது வசனங்களில் ஏழு முறைகள் பயன்படுத்தப்பட்டிருந்தது. இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் முடிவு வந்திருந்தது, மற்றும் அவர் தமது ஊழியம் முழுவதிலும் நிறைவேற்றுவதற்காகச் செயல்பட்டிருந்த மீட்பின் மாபெரும் திட்டம் உண்மை நிலையாக உதிக்கும் வேளை வந்திருந்தது. காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை, ஆனால் ஒவ்வொரு நபரும் தாம் கொண்டுள்ள சிறிய அளவிலான நேரத்தைச் செயல் வலிவான வகையில் பயன்படுத்த முடியும். யோவான் ஸ்நானன் தமது ஊழியத்தில் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற ஆறுமாதங்கள் மற்றும் ஒரு ஆண்டு ஆகியவற்றிற்கு இடையிலான காலகட்டத்தையே கொண்டிருந்தார், மற்றும் இயேசு, தாம் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற, தோராயமாக மூன்றரை ஆண்டுகளையே கொண்டிருந்தார். இந்த வியாழக்கிழமை மாலையில், மனிதகுமாரன் காலம் கடந்து கொண்டிருந்ததையும் இந்த பூமியின்மீது தமது ஊழியம் எவ்வாறு அதன் உச்சகட்டத்தை அடைந்துகொண்டிருந்தது

என்பதையும் பற்றி உணர்வுள்ளவராக இருந்தார் என்பது தெளிவு. நெருங்கிக் கொண்டிருந்த முடிவுக்கு அவருடைய அப்போஸ்தலர்கள் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

16:16-62ல் ‘‘கொஞ்சக்காலத்திலே’’ என்ற சொற்றொடரை இயேசு உபயோகித்தபோது அவர் எதை அர்த்தப்படுத்தினார்? எல்லா மனிதகுலத்துக்கும் இயேசு எதை அளித்துக் கொண்டிருந்தார் என்பது அதில் மறைமுகமாக இருக்கிறது என்பதை நாம் காண்கிறோம்.

## நிறைவேற்றி முடிக்கப்பட்ட இரட்சிப்பு

*அவர், இன்னும் ‘‘கொஞ்சக்காலத்திலே’’ ‘‘நீங்கள், நிறைவேற்றி முடிக்கப்பட்ட இரட்சிப்பைக் கொண்டிருப்பீர்கள்’’ என்று கூறினார்.* இயேசு, “கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள்” என்று இயேசு கூறினார் (16:16அ). அவர் பூமியில் இருந்து புறப்பட்டுச் செல்லுதல் - அவரைப் பின்பற்றுபவர்களிடம் சரீரப்பிரகாரமாக இருத்தலில் இருந்து நீங்கிச் செல்லுதல் - என்பது, அவர் தமது மீட்புப் பணியை நிறைவு செய்திருந்தார் என்பதை வெளிப்படுத்தியது. அவரது ஊழியம் ஏறக்குறைய நிறைவேற்றி முடிக்கப்பட்டது மற்றும் கிறிஸ்தவ யுகத்திற்கான தேவனுடைய மாபெரும் இயக்கம் செயல்படத் தொடங்கும்படி அமைக்கப்பட்டிருந்தது என்பதை அவரது வார்த்தைகள் மறைமுகமாக உணர்த்துகின்றன.

‘‘கொஞ்சக்காலத்திலே’’ என்ற அவரது சுருக்கமான சொற்றொடர் சுட்டிக்காண்பித்தபடி, மாபெரும் நிகழ்வானது ஏறக்குறைய உடனடியாக நடைபெறுவதாக இருந்தது. இன்னும் ஒரு மணி நேரத்தில் அவரைப் பிடிப்பதற்கு, கைது செய்யும் கும்பல் நெருங்கி வந்து, அவரை விசாரணை செய்து அவர் சிலுவையில் அறையப்படுவார். இயேசு தமது மரணத்தைத் தொடர்ந்து, மூன்று நாட்கள் கல்லறையில் இருப்பார் ஆனால் அவர் மரித்தோரில் இருந்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, தாம் உயிரோடிருப்பதை நாற்பது நாட்களின்போது செயல்விளக்கப்படுத்துவார். பின்பு அவர் பிதாவினிடத்திற்கு எழுந்தருளிச் செல்வார். பூமியில் உள்ள எவரும் இந்த நிகழ்வுகளின் உண்மையான தனிச்சிறப்பை அறியமுடியாது. இயேசு, நமக்கு இரட்சிப்பை அருளுதல் என்ற தமது ஊழியத்தை விரைவிலேயே முடித்துக் கொண்டு பிதாவின் வலது புறத்தில் இருந்து சபையின் தலைவராக ஆட்சி செய்வதற்கென்று பரலோகத்திற்குத் திரும்ப வேண்டியதாக இருந்தது.

சபையைக் கிரயம் கொள்ளுதல் மற்றும் உலகத்திற்கு இரட்சிப்பை அருளுதல் ஆகியவை, துன்பமிக்க, தியாகமான விலைசெலுத்தப்பட்டு வந்தன. இதைப்பார்த்த தூதர்கள் அச்ச உணர்வினால் தாக்கப்பட்டனர், உலகம் இதைப்பற்றி அறியாது இருந்தது. இயேசு அருளுகிற இந்த நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளாதவர்கள், மனிதருக்கு பரலோகத்தின் மிக உயர்வான கொடையில் இருந்து புறம்பே விலகிக் கொள்கின்றனர். ‘‘கொஞ்சக்காலம்’’ கடந்துள்ளது மற்றும் ‘‘இரட்சிப்பின் நாள்’’ இங்குள்ளது. அதன் மதிப்பை நாம் கண்டுகொள்ளாது இருப்பதில்லை என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்வோமாக.

## ஒழிந்துபோகாத தோழமை

*அவர், "இன்னும் கொஞ்சக்காலத்திலே நீங்கள் ஒழிந்துபோகாத தோழமையைக் கொண்டிருப்பீர்கள்" என்று கூறினார்.* நாம், "மறுபடியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள்" என்று வாசிக்கிறோம் (16:16ஆ). இயேசுவின் வார்த்தைகள், அவரது சுவிசேஷத்தை உலக நாடுகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டியவர்களாக இருந்தவர்களுக்கு அவர் வாக்குத்தத்தம் செய்திருந்த தோழமையை குறிப்பதாக இருந்திருக்க வேண்டும் (மத்தேயு 28:20). அவர் பரத்துக்கு ஏறிய பின்பு அவரது அப்போஸ்தலர்கள், தங்களுடன் அவர் ஆவிக்குரிய, உடல்ரீதியற்ற வகையில் இருக்கும் பிரசன்னத்தை அறிந்தவர்களாக அவரது பிரசன்னத்தில் திரும்பவும் இருப்பார்கள். இந்த ஆவிக்குரிய வகையில் அவர்களோடு இயேசு தங்கியிருக்கக் கூடும் வகையில், பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்படுவார். அவர்களை ஆவியானவர், சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தி, அவர்களின் பிரசங்கித்தல், எழுதுதல் மற்றும் ஊழியம் செய்தல் ஆகியவற்றிலும் அவர்களை வழிநடத்த வேண்டியிருந்தது. அவரின் வழிகாட்டுதலின் மூலமாக அவர்கள், இயேசுவின் சித்தம், அங்கீகாரம் மற்றும் பிரசன்னத்தில் தொடர்ந்து நிலைத்திருப்பதை அறிவார்கள்.

ஆவியானவரின் நடத்துவத்தின்கீழ் வாழ்கிறவர்கள் மாத்திரமே இயேசுவின் ஆவிக்குரிய பிரசன்னத்தை அறிய முடியும். சபையின் ஆண்டவராகிய இயேசுவை மகிமைப்படுத்தவே ஆவியானவர் நமக்குள் தங்கியிருக்கிறார். இயேசுவின் பிரசன்னத்தை அறியாத நபர், எந்த ஒரு நபரும் பெறக்கூடிய ஐக்கியத்தைத் தவறவிடுகிறார்.

## நித்திய சந்தோஷம்

*அவர், " 'இன்னும் கொஞ்சக் காலத்திலே' நீங்கள் நித்திய சந்தோஷத்தைக் கொண்டிருப்பீர்கள்" என்று கூறினார்.* இயேசு பின்வருமாறு அறிவித்தார்:

> மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம் வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளைபெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினையாள். அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கமடைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான் (16:20-22).

அடுத்த சிலநாட்களுக்கு, இந்த உலகமானது இயேசுவின் போதனைகள் இந்த பூமியில் இருந்து துடைத்தெறியப்பட்டன என்று நினைவைத் துய்த்துக் கொண்டிருக்கையில், அப்போஸ்தலர்கள் அழுது புலம்புவார்கள். இருப்பினும் காலம் கடந்து செல்லுகையில் அவர்கள், தங்கள் அழுகைக்குக் காரணமான விஷயம் எதுவோ, அதுவே தங்கள் சந்தோஷத்திற்குக் காரணமாவதை உணர்ந்து அறிவார்கள். சற்றுநேரம் உலகம் சந்தோஷம் அடையக் காரணமாயிருந்த

இயேசுவின் மரணம், அப்போஸ்தலர்களின் நித்திய சந்தோஷத்திற்கான வேளையாயிற்று. இந்த தனிச்சிறப்பான மாற்றத்தை இயேசு, ஒரு பெண் தனது பிள்ளையைப் பிரசவிப்பதற்கு ஒப்பிட்டார். பிள்ளை பெறும் வேளையில் பெண்ணுக்கு ஏற்படும் கடுமையான வலி, அதற்குப் பின்பு வரும் சந்தோஷத்திற்கான காரணத்தை உண்டாக்குகிறது; அவள் புதிதாய்ப் பிறந்த குழந்தையைத் தனது கைகளில் ஏந்தி, தனது வாழ்வில் தாய் என்ற அந்தஸ்தில் பிரவேசிக்கும்போது, அவளது வேதனை சந்தோஷமாக மாறுகிறது. அந்தக் குழந்தையின் தொடர்ந்த இருப்பானது, அதன் தாயை நிறைவான சந்தோஷத்திற்குள் நடத்துகிறது.

கிறிஸ்தவமானது அதன் முழுமைத் தன்மையில் நிலைநாட்டப்பட்ட பின்பு, (எல்லாக் கிறிஸ்தவர்களும் செய்வது போல) அப்போஸ்தலர்கள் தங்கள் இரட்சிப்பில் இடைவிடாத மற்றும் முழுநிறைவான சந்தோஷத்தையும் இயேசுவுடன் தோழமையையும் நித்திய நம்பிக்கையையும் மகிழ்வுடன் அனுபவித்தனர். அவர்கள் (ஆண்டவரின்) சிலுவை, உயிர்த்தெழுதல் மற்றும் பரத்துக்கேறுதல் ஆகியவற்றிற்கான காரணத்தைத் தெளிவாகக் காண முடிந்தது. மன்னிப்பு மற்றும் இயேசுவுடனான தோழமை மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வருகை ஆகியவை யாவும் ஒன்றுகூடி, அவர்களின் இருதயங்களில் பரலோகத்தின் சந்தோஷத்தை ஊன்றின.

சந்தோஷம் என்பது எப்போதுமே, மாபெரும் உண்மை நிலையின் பிரசன்னத்தினுடைய பின்விளைவாக உள்ளது. நாம் சந்தோஷம் என்பதை நேரடியாக அடைவதில்லை; நாம் இயேசுவைச் சென்று அடைகிறபோது. அவர் நமது இருதயங்களில் வந்து சேருகிறார், அவர் தமது பங்காகச் சந்தோஷத்தைக் கொண்டுவருகிறார். பூமியில் உள்ள எந்த சந்தோஷத்தையும் இயேசு கொண்டுவருகிற சந்தோஷத்துடன் ஒப்பிட முடியாது. அது தேவனுடைய மன்னிப்பு மற்றும் இயேசுவின் பிரசன்னம் ஆகியவற்றின் மூலம் வருகிறது, மற்றும் அது முழுநிறைவான பண்பைக் கொண்டிருக்கிறது.

## முடிவுரை

இந்த சந்தர்ப்பப் பொருளில் இயேசு மூன்று முறை பயன்படுத்திய, "கொஞ்சக்காலம்" என்ற சொற்றொடர், இப்போது தனது முன்னோக்கிய கண்ணோக்கைக் கொண்டிருப்பதில்லை, ஏனெனில் ஆவியானவர் பற்றிய அவரது வாக்குத்தத்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது. என்ன நடந்தது என்பதற்கு நாம் நமது சிந்தைகளைத் திருப்புகையில், இயேசு எதிர்பார்த்த - அவரது மரணம், கிறிஸ்தவ யுகத்தின் வருகை மற்றும் இந்த நிகழ்வுகள் அவர் மீது அன்புகூர்ந்து நம்பிக்கை வைப்பவர்கள் மீது பொழிய இருந்த சந்தோஷ நிறைவேற்றம் என்ற - நிகழ்வுகளை நாம் பின்னோக்கிக் கண்ணோக்க முடியும். நாம் இனியும், "என்ன நடக்கும்?" என்று கூறுவதில்லை, அதற்குப் பதிலாக நாம், என்ன நடந்துள்ளது என்பதைக் குறித்து அகம் மகிழ்ந்து, கிறிஸ்து நமக்குக் கொண்டு வந்துள்ள புதிய மற்றும் ஜீவனுள்ள மார்க்கத்தில் நடக்கிறோம்!

---

*"அப்பொழுது அவர்கள் அவனுடைய யோசனைக்கு உடன்பட்டு, அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப்*

*பேசக்கூடாதென்று கட்டளையிட்டு, அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்" (நடபடிகள் 5:40-42).*